இணைப்பு I

(877 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 45—சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை

அறிவிப்புகள், 2010–2011

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை

1. மாற்றுத் திறனாளிகளுக்கான 'வழிகாட்டும் திட்டம்' செயல்படுத்துதல்

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வழங்கும் சலுகைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவை மாற்றுத் திறனாளிகளுக்குச் சென்றடையும் வகையில் தற்போது குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சமுதாயம் சார்ந்த மறுவாழ்வுப் பணியாளர்கள் மற்றும் பலநோக்கு மறுவாழ்வுப் பணியாளர்கள் ஆகியோரை களப் பணியாளர்களாகக் கொண்டு தன்னார்வ தொண்டு நிறுவனங்களின்மூலம்' செயல்படுத்தப்பட்டு வரும் மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வுத் திட்டம் சீரமைக்கப்பட்டு 'வழிகாட்டும் திட்டம்' என்ற பெயரில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

2. அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுடன் பயணம் செய்யும் துணையாளருக்கு (Escort) நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் பயணம் செய்ய அனுமதி வழங்குதல்

தமிழக அரசு அனைத்து வகை மாற்றுத் திறனாளிகளுக்கும் நான்கில் ஒரு பங்கு கட்டணத்துடன் அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய ஏற்கெனவே அனுமதி வழங்கியுள்ளது. உடல் குறைபாட்டின் தன்மை மற்றும் தாக்கம் ஆகியவற்றின் காரணமாக துணையாளரின் (Escort) உதவியோடு மட்டுமே சிலர் பயணம் செய்யும் நிலையில் உள்ளனர். இத்தகைய மாற்றுத் திறனாளிகளின் நலனைக் கருத்தில் கொண்டு இவர்களுடன் பயணம் செய்யும் துணையாளருக்கும் (escort) நான்கில் ஒரு பங்கு கட்டணச் சலுகையுடன் (இருவருக்கும்) அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படும்.

[2010 மே 13

3. மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் கடனுதவிகள் வழங்க மாநில அரசின் உத்தரவாதத் தொகையை (Government Guarantee) இரண்டு மடங்காக உயர்த்துதல்

மத்திய அரசின் தேசிய மாற்றுத் திறனாளிகள் நிதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மாநில அளவிலான நெறிப்படுத்தும் நிறுவனமாக (State Level Nodal Agency) தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி செயல்பட்டு மாற்றுத் திறனாளிகளுக்கு சுயதொழில் தொடங்க கடனுதவிகளை வழங்கி வருகிறது. இதற்காக மாநில அரசு ரூ.4 கோடி உத்தரவாதம் அளித்து வருகிறது. கடந்த ஆண்டுகளைவிட கூடுதல் எண்ணிக்கையில் மாற்றுத் திறனாளிகள் கடனுதவிகளைப் பெறும் வகையில் அரசு உத்தரவாதத் தொகை (Government Guarantee) ரூ. 4 கோடியிலிருந்து ரூ. 8 கோடியாக உயர்த்தப்படும்.

4. சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் மதிப்பூதியத் தொகையை ரூ. 3000 /–லிருந்து ரூ. 5000/– ஆக உயர்த்தி வழங்குதல்

அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் நடத்தும் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான சிறப்புப் பள்ளிகளில் பயிற்றுவிக்கும் சிறப்பாசிரியர்கள் மற்றும் தசைப் பயிற்சியாளர்கள் அனைவரையும் தொடர்ந்து ஊக்கப்படுத்தும் வகையில் தற்போது அரசு அவர்களுக்கு மாதம் ரூ. 3,000/- மதிப்பூதியம் வழங்கி வருகிறது. இந்த மாதாந்திர மதிப்பூதியத் தொகை ரூ. 3,000/-லிருந்து ரூ. 5,000/-ஆக இந்த ஆண்டு முதல் உயர்த்தி வழங்கப்படும்.

5 அரசு சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியருக்கு சுற்றுலா ஏற்பாடு செய்தல்

மாற்றுத் திறனாளிகளின் தனிப்பட்ட கல்வித் தேவைகளைக் கருத்தில் கொண்டு அமைக்கப்பட்டுள்ள அரசு சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகளை ஆண்டுக்கு ஒரு முறை சுற்றுலா அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்யப்படும்.

2010 மே 13]

6 மாற்றுத் திறனாளிகளுக்கான திருமண நிதி உதவித் தொகையை ரூ. 20,000/—லிருந்து ரூ. 25,000/—ஆக உயர்த்தி வழங்குதல்

அனைத்துப் பிரிவு மாற்றுத் திறனாளிகளுக்கும் தற்போது திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் ரூ. 20,000/- வழங்கப்பட்டு வருகிறது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி உதவி இந்த அரசால் உயர்த்தப்பட்டுள்ளதால், மாற்றுத் திறனாளிகளுக்கும் திருமண நிதி உதவித் தொகை ரூ. 20,000/-லிருந்து ரூ. 25,000/- ஆக உயர்த்தப்படும். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் மாற்றுத் திறனாளிகளுக்கு அனைத்து நலத் திட்டங்களிலும் வருமான உச்சவரம்பினை முழுமையாக நீக்கி இந்த அரசு அறிவித்துள்ளது. அதன் அடிப்படையில் இத்திட்டத்தின்கீழ் கூடுதல் பயனாளிகள் பயனடைவர்.

7. அரசு பொதுத் தேர்வுகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ/மாணவியருக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகையை மூன்று மடங்காக உயர்த்தி வழங்குதல்

பார்வையற்ற மாற்றுத் திறனாளி மாணவ, மாணவியரை ஊக்கப்படுத்தும் வண்ணம் அவர்கள் 10-வது மற்றும் 12-வது வகுப்புப் பொது தேர்வுகளில் மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோருக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுத் தொகை இந்த ஆண்டு முதல் மூன்று மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

8. மாற்றுத் திறனாளிகளுக்கான துயர் உறுவோர் நிவாரண நிதி

கடும் வன்முறைச் செயல்களால் பாதிக்கப்படும் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவிட நிவாரண நிதி ஒன்று ஏற்படுத்தப்படும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அமைந்த மாவட்ட அளவிலான குழு இந்த உதவித் தொகையை பயனாளிகளுக்கு வழங்கும்.

9 அரசு மறுவாழ்வு இல்லங்களில் உள்ள சமையலறைகளை நவீனமாக்குதல்

தொழுநோயால் அவதியுறும் நோயாளிகளுக்கு மருத்துவ உதவி மற்றும் மறுவாழ்வு அளித்திட 10 மறுவாழ்வு இல்லங்களும்

[2010 மே 13

ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஒன்றும் செயல்பட்டு வருகின்றன. இதில் பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தின் சமையலறை நவீனமயமாக்கப்பட்டுள்ளது. அதேபோல, அனைத்து அரசு மறுவாழ்வு இல்லங்கள் மற்றும் அரசு ஏழைகள் பராமரிப்பு இல்லம் ஆகியவற்றின் சமையலறைகள் மூன்றாண்டு காலகட்டத்தில் நவீனமயமாக்கப்படும்.

10. மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டுக்காக 1,000 சுய உதவிக் குழுக்கள் அமைத்தல்

பொருளாதாரத்தில் பின்னடைவு பெற்ற பல பிரிவினர் சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயன்பெற்று வருகின்றனர். அதுபோலவே, மாற்றுத் திறனாளிகளும் பொருளாதார மேம்பாடு அடைய அவர்களைக் கொண்டு 1,000 சுய உதவிக் குழுக்கள் இந்த ஆண்டு தமிழ்நாட்டில் அமைக்கப்படும்.

11. காது கேளாத மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளிகளுக்கான மத்திய அரசின் தேசிய நிறுவனங்களின் மண்டல மையங்களை தமிழ்நாட்டில் அமைக்க மத்திய அரசை வலியுறுத்தல்

பலவகைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய நிறுவனமும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய நிறுவனத்தின் மண்டல மையமும் தற்போது தமிழ்நாட்டில் செயல்பட்டு வருகின்றன. இதர வகையான மாற்றுத் திறனாளிகளுக்கான தேசிய நிறுவனங்களின் மண்டல மையங்களை தமிழ்நாட்டில் அமைக்க வேண்டும் என மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்தும். இதற்குத் தேவையான நிலத்தைத் தமிழக அரசு வழங்கும்.

12. அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகள் நல மாவட்ட அலுவலகங்களை அமைத்தல்

தமிழகத்தில் தற்போது 30 மாவட்டங்களில் மாற்றுத் திறனாளிகள் நல மாவட்ட அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. புதிதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள அரியலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களிலும் மாற்றுத் திறனாளிகள் நல மாவட்ட அலுவலகம் இந்த ஆண்டு அமைக்கப்படும். இதன்மூலம் மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகம் இல்லாத மாவட்டமே இல்லை என்ற நிலை உருவாகும்.

2010 மே 13]

13. அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களுக்கும் ஈப்புகள் மற்றும் கணினிகள் வழங்குதல்

மாற்றுத் திறனாளிகளுக்கான நலத் திட்டங்களை முனைப்புடன் செயல்படுத்திட அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலகங்களுக்கும் ஈப்புகள் மற்றும் கணினிகள் வழங்கப்படும்.

14. தசைச் சிதைவு (Muscular Dystrophy) நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு மையங்கள் அமைத்தல்

மரபுவழி நோய்களில் ஒன்றான தசைச் சிதைவு நோய் (Muscular Dystrophy) பாதிக்கப்பட்டவர்களின் தசைச் செயல்பாட்டை படிப்படியாக குறைத்து, அவர்களை முழுமையாக முடக்கி விடுகிறது. இந்நோயின் தாக்கத்தை முறையான தசைப் பயிற்சியின் (Physiotherapy) மூலமே கட்டுக்குள் வைக்க முடியும். எனவே, இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான தசைப் பயிற்சி அளிக்கவும், ஆலோசனை வழங்கவும், பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் ஏற்படுத்தப்படும். முதல் கட்டமாக சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் வேலூர் மாவட்டங்களில் இந்த பகல் நேரப் பராமரிப்பு மையங்கள் தனியார் தொண்டு நிறுவனங்கள்மூலம் அமைக்கப்படும்.

15. ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகள் மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மடக்கு சக்கர நாற்காலிகள் (Foldable Wheel Chairs) வழங்குதல்

ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடு உடைய மாற்றுத் திறனாளிகள் மற்றும் கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் 150 பேருக்கு ஒவ்வொரு ஆண்டும் மடக்கு சக்கர நாற்காலிகள் அரசால் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு சிறப்பினமாக அதிக மாற்றுத் திறனாளிகள் இத்திட்டத்தின்கீழ் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் 1,500 பேருக்கு இலவசமாக மடக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்படும்.

16. மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மாற்றி வடிவமைக்கப்பட்ட சிறப்பு நாற்காலிகள் வழங்குதல்

கடும் மூளை முடக்குவாதத்தால் (Cerebral Palsy) பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் கை, கால்களின் தசை இறுக்கமாக

[2010 மே 13

(Spasm) இருப்பதாலும், சிலருக்கு கழுத்துப் பகுதி வளைந்த நிலையில் இருப்பதாலும், இவர்களது தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் புதிதாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு நாற்காலிகள் அரசால் 500 பேருக்கு முதல் கட்டமாக வழங்கப்படும்.

17. பார்வைக் குறைபாடுடைய ஆறு வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Centres) துவக்குதல்

செவித் திறன் குறைபாடுடைய மற்றும் மனவளர்ச்சி குன்றிய மாற்றுத் திறனாளி சிறார்களுக்கு ஏற்கெனவே ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் துவக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு, முதன் முறையாக பார்வை குறைபாடு உடைய ஐந்து வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி சிறார்களுக்காக ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Centres) அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மூலம் 5 மாவட்டங்களில் அமைக்கப்படும். பார்வையற்ற சிறார்கள் மற்ற குழந்தைகள் போல சாதாரண பள்ளிகளில் சேர்ந்து கல்வி பயில தேவையான திறன்களை வளர்ப்பதும், மாற்றுத் திறனாளிகளின் பெற்றோருக்கும் குடும்பத்தினருக்கும் தக்க ஆலோசனைகள் வழங்குவதும் இந்த மையங்களின் நோக்கம் ஆகும்.

18. மனநோயால் பாதிக்கப்பட்டோர்களை மீட்டு மனநோய் மருத்துவமனைகள் மற்றும் மறுவாழ்வு இல்லங்களில் சேர்க்கும் "மீட்புத் திட்டம்"

பொது இடங்களில் ஆதரவற்ற நிலையில் திரிந்து கொண்டிருக்கும் மன நோயாளிகளைக் கண்டறிந்து உரிய விதிமுறைகளைப் பின்பற்றி மனநோய் மருத்துவமனையிலோ அல்லது தொண்டு நிறுவனங்கள்மூலம் அரசால் நடத்தப்பட உள்ள பராமரிப்பு இல்லங்களிலோ சேர்ப்பதில் உள்ள பல்வேறு நடைமுறைச் சிக்கல்களையும், பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஒரு "மீட்புத் திட்டம்" வகுத்து செயல்படுத்தப்படும். மனநோயால் பாதிக்கப்பட்டோரின் நலன் காக்க இந்த "மீட்புத் திட்டம்' அரசு சாரா தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்படும்.

2010 மே 13]

19. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கு (Early Intervention Centres) கற்பித்தல் கருவிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல்

மனவளர்ச்சி குன்றிய மற்றும் செவித் திறன் குறைபாடுடைய மாற்று திறனாளி சிறார்களின் நலனுக்காக தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்படும் அனைத்து ஆரம்ப நிலை பயிற்சி மையங்களுக்கும் (Early Intervention Centres) இந்த சிறப்புக் குழந்தைகளின் ஆற்றலையும், திறன்களையும் மேம்படுத்துவதற்காக கற்பித்தல் கருவிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படும்.

20. செவித்திறன் குறைபாடுகளைக் கண்டறியும் ஆரம்ப நிலை பரிசோதனை மையத்தை தூத்துக்குடியில் அமைத்தல்

குழந்தை பிறந்தவுடனேயே செவித்திறன் குறைபாடுகளைக் கண்டறியும் பரிசோதனையும், பின்னர் குழந்தைப் பருவத்தின்போது தொடர் செவித்திறன் பரிசோதனைகளையும் மேற்கொள்வதும் இக்குறைபாட்டைக் கட்டுப்படுத்த மிகவும் அவசியமானதாகும். பிறந்த குழந்தைகளுக்கு உள் ஒலி உணர்வுத் திறன் பரிசோதனை மற்றும் குரலொலிக்கு மூளையின் செயல்பாடு (Oto Acoustic Emission & Auditory Brainstem Response) போன்ற பரிசோதனைகளை மேற்கொள்ள ஆரம்ப நிலை பரிசோதனை மையம் (Easly Diagnostic Centre) ஒன்று தூத்துக்குடியில் அமைக்கப்படும். பரீட்சார்த்தமான அடிப்படையில் அதன் செயல்பாடுகளைக் கண்டறிந்த பின்பு, இத்திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

21. ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் (Early Intervention Centres) பயிலும் செவித்திறன் குறையுடைய சிறார்களுக்கு இரு செவிகளுக்கும் தேவையான காதொலிக் கருவிகள் வழங்குதல்

செவித்திறன் குறையுடைய இளஞ்சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்கள் (Early Intervention Centres) தற்போது 31 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. மூன்று வயதிற்குள் உரிய பேச்சு மற்றும் மொழி வளர்ச்சிக்கான பயிற்சியை அளித்து அவர்கள் 6 வயது அடையும் போது சாதாரணப் பள்ளிகளில் ஒருங்கிணைத்து பயிலச் செய்வதே இம்மையங்களின் முக்கிய நோக்கமாகும். இதற்கு, இக்குழந்தைகளின் எஞ்சியுள்ள கேட்கும் திறனை (Residual Hearing) நல்ல முறையில் பயன்படுத்தி

இவர்களின் பேச்சு மற்றும் மொழி வளர்ச்சி மேம்படுவதற்கு இரு செவிகளுக்கும் தேவையான காதொலிக் கருவிகள் வழங்கப்படும்.

22. மன வளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் (Early Intervention Centres) பணியாற்றும் சிறப்பு ஆசிரியர்களுக்கு புத்தாக்கப் பயிற்சி (Refresher Course) அளித்தல்

தற்போது 30 மாவட்டங்களில் தொண்டு நிறுவனங்கள்மூலம் நடத்தப்பட்டு வரும் மனவளர்ச்சி குன்றிய சிறார்களுக்கான ஆரம்ப நிலை பயிற்சி மையங்களில் பணிபுரியும் சுமார் 150 சிறப்பு ஆசிரியர்களின் திறமையை வளர்க்கவும், மறுவாழ்வுத் துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி குறித்த தகவல்களை வழங்கவும் புத்தாக்கப் பயிற்சி (Refresher Course) அளிக்கப்படும்.

23. அனைத்து மாற்றுத் திறன் படைத்த மாணவ மாணவியர்களைப் பள்ளிகளிலும் உள்ளார்ந்த கல்வி முறைத் திட்டங்களிலும் சேர்த்தல்

6 வயது முதல் 14 வயதிற்குட்பட்ட மாற்றுத் திறனாளி குழந்தைகள் அனைவரையும் இயல்பான கல்வி முறை அல்லது உள்ளார்ந்த கல்வி முறைத் திட்டங்களில் 100 சதவீதம் சேர்ப்பதற்கான சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பள்ளி செல்லா மாற்றுத் திறனாளி குழந்தைகளைக் கண்டறிந்து அவர்களை சாதாரணப் பள்ளிகள் அல்லது உள்ளார்ந்த கல்வித் திட்ட மையங்கள் ஆகியவற்றில் சேர்ப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் சேர்க்கை முகாம்கள் நடத்தப்படும்.

24. மாற்றுத் திறனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகள் சென்றடைவதை உறுதி செய்தல்

மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற உதவிகள் அனைத்தும் செம்மையாகப் போய்ச் சேருகின்றனவா என்பதை அறிந்திடவும், அதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அந்த மாற்றுத் திறனாளிகள் வாழும் பகுதிகளில் உள்ள அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளை அவ்வப்போது தொடர்பு கொண்டு அவர்களுக்கு துணை நிற்க, அரசின் சார்பில் தேவையான வழிவகைகள் மேற்கொள்ளப்படும்.